பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 02 2025 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. 2025-26-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.
2. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நிறைவடைய இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் அங்கு பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.
3. சட்டவிரோத குடியேற்றத்தை இந்தியா எதிர்ப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
4. தமிழகத்தில் இரண்டு இடங்கள் உட்பட புதிதாக நான்கு ராம்சார் சதுப்புநில பகுதிகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
5. ஹாக்கி இந்தியா லீக் இறுதிப் போட்டிக்கு ஹைதராபாத் அணி தகுதி பெற்றுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

2025-26-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.

இந்த பட்ஜெட்டை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்து உரையாற்றுகிறார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்றப் பின்னர் தாக்கல் செய்யப்படும் இரண்டாவது பட்ஜெட் இதுவாகும்.

மத்திய நிதி அமைச்சராக திருமதி நிர்மலா சீதாராமன் பொறுப்பேற்றப் பின்னர் அவர் தொடர்ந்து தாக்கல் செய்யும் எட்டாவது பட்ஜெட் இதுவாகும்.

மக்களவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அதன் நகல் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்படும்.

பட்ஜெட் தொடர்பாக திருமதி நிர்மலா சீதாராமன், ஏற்றுமதியாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், வேளாண் பொருளாதார நிபுணர்கள், தொழிற்சங்கங்கள், கல்வி, சுகாதார துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள்,

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் நிதித்துறையைச் சேர்ந்த பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை நடத்தினார்.

2021-ஆம் ஆண்டு முதல் காகிதமில்லா பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

முன்னதாக நேற்று திருமதி நிர்மலா சீதாராமன் தமது அமைச்சகத்தின் செயலாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் பட்ஜெட் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்திரியும் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் கட்டம் இம்மாதம் 13-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டாவது கட்ட கூட்டத்தொடர் மார்ச் மாதம் பத்தாம் தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் நான்காம் தேதி நிறைவடையும் என்று மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நிறைவடைய இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் அங்கு பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

அரசியல் கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி நேற்று நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசினார்.

பிஜேபி வெற்றிபெற்றால் தில்லி மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார்.

கடந்த 11 ஆண்டுகளாக தில்லியில் நிலுவையில் உள்ள அனைத்து பணிகளும் முடிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கங்கை நதி மாசு அடைந்து விட்டதாக ஆம் ஆத்மி அரசின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என்று பிரதமர் கூறினார்.

தில்லியை ஆட்சி செய்து வரும் ஆம் ஆத்மி தலைமையிலான அரசு ஊழலில் சிக்கித் தவிப்பதாக அவர் குற்றம்சாட்டினார்.

தில்லியில் பிஜேபி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தலைநகர் மட்டுமல்லாமல் அதனை சுற்றியுள்ள பகுதிகளும் நவீன வசதிகளைப் பெறும் என்று கூறினார்.

ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தமது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

சட்டவிரோத குடியேற்றத்தை இந்தியா எதிர்ப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், சட்டவிரோத குடியேற்றத்தால் திட்டமிடப்பட்ட குற்றங்கள் நடைபெறுவதாகக் கூறினார்.

இந்திய மக்கள் சட்டப்படியாக அமெரிக்காவில் குடியேறுவதற்கான ஏற்பாடுகளை வெளியுறவுத்துறை அமைச்சகம் செய்து வருவதாகவும், இதில் அந்நாட்டிற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்படும் நபர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்பு அவர்களின் தேசிய அடையாளம் குறித்து உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அந்நாட்டிடம் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈரானில் மூன்று இந்தியர்கள் காணாமல் போனது குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், அவர்களது குடும்பத்தினருடன் வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பு கொண்டு வருவதாகக் கூறினார்.

வணிக நோக்கத்திற்காக அவர்கள் ஈரானுக்கு சென்றதாகவும், அங்கு சென்ற பின்னர் அவர்களிடமிருந்து எந்த தொடர்பும் இல்லை என்று குடும்பத்தினர் தெரிவீத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினை குறித்து புதுதில்லியில் உள்ள இந்தியாவுக்கான ஈரான் தூதரக அலுவலகம் மற்றும் ஈரானில் உள்ள அந்நாட்டு வெளியுறவுத் துறை அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்ப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

காணாமல்போன இந்தியர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஈரானில் உள்ள இந்திய தூதரக அலுவலகம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான காங்கோவில் பாதுகாப்பு நிலைமை நாளுக்கு நாள் மோசமடைவது குறித்து இந்தியா கவலை கொள்கிறது என்றும் அவர் கூறினார்.

அங்குள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப் பட்ப்டுள்ளதாகவும், காங்கோ தலைநகர் **Goma**-வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருவதாகவும் திரு ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு புதிதாக நான்கு ராம்சார் சதுப்புநில பகுதிகளை அறிவித்துள்ளது.

இது குறித்து மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இந்த எண்ணிக்கையையும் சேர்த்து நாடு முழுவதிலும் உள்ள பாதுகாக்கப்ப்ட்ட சதுப்பு நில பகுதிகளின் எண்ணிக்கை 89-ஆக அதிகரித்துள்ளது என்று கூறியுள்ளார்.

தமிழகத்தில் ராமநாதபுரம் மாவட்டம் சக்கரைக்கோட்டை, தேர்த்தங்கல் ஆகியவை புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ராம்சார் சதுப்புநிலப் பகுதிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து நாட்டிலேயே அதிகமான சதுப்பு நில பகுதிகள் உள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழகத்தில் மொத்தம் 20 இடங்கள் ராம்சார் சதுப்பு நில பகுதிகளாக உள்ளன.

அடுத்தபடியாக உத்திரபிரதேசத்தில் பத்து ராம்சார் சதுப்பு நிலப் பகுதிகள் உள்ளன.

**[]<<<>>>[]**

சர்வதேச புத்தகக் கண்காட்சி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது..

தில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த கண்காட்சியில் பிரான்ஸ், ஸ்பெயின், அர்ஜெண்டினா, அபுதாபி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பதிப்பகங்கள் தங்களது புத்தகங்களை காட்சிப்படுத்த உள்ளன.

ஒன்பது நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைக்கிறார்.

இந்த ஆண்டு ரஷ்யா நாட்டின் புத்தகங்கள் முன்னிலைப்படுத்தப்படும் என்று புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தேசிய புத்தக நிறுவனத்தின் இயக்குநர் திரு யுவராஜ் மாலிக் கூறினார்.

இந்த கண்காட்சியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பதிப்பகத்தாரும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேச்சாளர்களும் பங்கேற்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்பதாவது புத்தக திருவிழா நேற்று தொடங்கியது.

இதில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

கடலோர காவல்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி கடலோர காவல்படை சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதையொட்டி பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய கடலோரக் காவல்படை அடுத்த ஐந்து ஆண்டுகளில் அதன் கப்பல்களின் எண்ணிக்கையை 200-ஆகவும், விமானங்களின் எண்ணிக்கையை நூறாகவும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கடலோரக் காவல்படை இன்று தனது 49-வது ஆண்டு விழாவையும் கொண்டாடுகிறது.

கடந்த ஓராண்டில் நாடு முழுவதும் 52 ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான கடத்தல் பொருட்களை இப்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்

அண்மையில் அந்தமான் கடல் பகுதியில் சுமார் ஆறாயிரம் கிலோ போதைப்பொருளை இப்படையினர் பறிமுதல் செய்தனர்.

கடலோர காவல்படையின் சேவைத்திறன் அதிகரித்துள்ள நிலையில், உலகில் வலிமையான படையாக வளர்ந்துள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

கடலோரக் காவல்படையின் நிறுவன நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் அப்படையினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் இறுதிப் போட்டிக்கு ஹைதராபாத் அணி தகுதி பெற்றுள்ளது.

ரூர்கேலாவில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 3-1 என்ற கோல் கணக்கில் சூர்மா அணியை வென்றது.

இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

சீனாவில் இம்மாதம் ஏழாம் தேதி முதல் 14-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிக்கான இந்திய அணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

59 தடகள வீரர்கள், 29 அதிகாரிகள் உட்பட 88 பேர் கொண்ட இந்திய அணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு முதல் முறையாக மத்திய அரசு நிதி உதவியை அளித்துள்ளது.

[]<<<>>>[]

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை வென்றது.

புனேயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து இரண்டு பந்துகள் மீதம் இருக்கையில் 166 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா மூன்று – ஒன்று என்ற கணக்கில் தொடரை வென்றது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று மும்பை - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

[]<<<>>>[]

உத்தராகாண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் பதக்கப்பட்டியலில் மணிப்பூர் ஒன்பது தங்கம், ஏழு வெள்ளி, மூன்று வெண்கலம் உள்ளிட்ட 19 பதக்ககங்களுடனம் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

முப்படை அணி 18 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், 17 பதக்கங்களுடன் கர்நாடகா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

நான்கு தங்கம், ஐந்து வெள்ளி, ஐந்து வெண்கலம் என 14 பதக்கங்களுடன் தமிழகம் ஆறாவது இடத்தில் உள்ளது.